| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>ராஜ்குமார் | அ.வ.எண். 296/2017 | 14.10.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

10) தாவா சொத்திற்கு அருகில் வயல்வெளி மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து காலிமனையாகவும் அனைவரும் நடந்து செல்லும் இடமாக தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல, தாவா சொத்தில் பூஞ்செடிகள் உள்ளது. தாவா சொத்தை சுற்றி வயல்வெளி உள்ளதா என்றால் சுற்றிலும் புஞ்சை நிலம் மற்றும் வீடுகள் தான் உள்ளது. தாவா சொத்து சுற்றிலும் முள்வேலி அமைத்து நான் அனுபவம் செய்து வருவதை பொறுத்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேன்.

11) தாவா சர்வே எண்ணில் மொத்தம் 34 செண்டில் பொதுவில் பிரிப்படாத எவ்வளவு சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் 11 ஏர்ஸில் நாச்சாரம்மாள் அனுபவம் செய்து வந்த 9 ஏர்ஸ் நிலத்தை நானும் வெங்கடாசலமும் சேர்ந்து கிரையம் பெற்றோம். மொத்தமுள்ள 34–1/2 செண்டில் நான் எவ்வளவு செண்ட் கிரையம் பெற்றேன் என்றால் 22 செண்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளேன். மொத்தம் உள்ள 34–1/2 செண்டில் நான் கிரையம் வாங்கியுள்ள சொத்தை பொறுத்து தனி நான்கெல்லையோ பாகவிரிவினையோ நாச்சாரம்மாள் அவர்கள் சம்மந்தப்பட்ட நபர்கள் பிரித்துக்கொண்டதை பொறுத்து ஆவணம் எதுவும் பார்த்து கிரையம் பெற்றேனா என்றால் அவர்களுக்குள் வாய்மொழியாக பாகபிரிவினை ஏற்பட்டு அனுபவம் செய்து வந்ததை பொறுத்து கிரையம் பெற்றேன்.

12) நாச்சாரம்மாள் கூட்டுப்பட்டாவில் குறிப்பிட்டுள்ள நபர்கள் மற்றும் அவரது வகையாறக்களை விசாரணை செய்தால் வாய்மொழி பாகம் ஏற்பட்டு நாச்சாரம்மாள் அனுபவம் செய்து வந்த விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. ஏற்கனவே நாச்சாரம்மாள் வகையறாவை பொறுத்து வாய்மொழி பாகபிரிவினை என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு வாய்மொழி பாகபிரிவினை நடைபெற்ற உண்மையை கூட்டுப்பட்டாவில் கண்டுள்ள நபர்களை பொறுத்து எதற்காக விசாரணை செய்யக்கூடாது என்று நான் செல்கிறேன் என்றால் மேற்படி நபர்களுக்கு வயதாகிவிட்டது, எழுதபடிக்க தெரியாது மற்றும் ஞாபக மறதி ஆகிய காரணங்களால் தான் அவ்வாறு சொல்கிறேன். மேற்படி நபர்களுக்கு அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்தால் வயதாகிவிட்டது என்பது பற்றியும் ஞாபக மறதி உள்ளதா என்பது பற்றியும் தெரியவரும் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் வாய்மொழி பாகபிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றாலும் கூட்டுபட்டாதாரர்களை நீதிமன்றத்தில்அழைத்து விசாரணை செய்தால் உண்மை தெரியவந்துவிடும் என்ற காரணத்தினால் தான் ஆட்சேபனை செய்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக கூட்டுப்பட்டாவில் உள்ள சொத்தை வாங்கும் போது வருவாய் துறைக்கு சென்று யார் யாருக்கு எவ்வளவு அளவுகள் பாத்தியப்பட்டது என்ற விபரத்தை கேட்டு தெரிந்து கொண்டு தான் கிரையம் பெறவேண்டும் என்றால் சரிதான்.

13)நான் தாவா சொத்தை கிரையம் பெறும் போது தாவா புல எண்ணில் எவ்வளவு நிலம் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரத்தை வருவாய் துறையிடம் (VAO) கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான். கூட்டுப்பட்டாவில் ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ள பாக சொத்தை பொறுத்து அவரவர்களுக்கு உரிய பாக சொத்தினை மட்டும் கிரையம்

பெற்றால் மட்டுமே செல்லுபடியாகும் என்றால் சரிதான். கூட்டுரிமையாளரின் பாகத்தையும் சேர்த்து நாச்சாரம்மாளிடம் இருந்து நான் கிரையம் பெற்றிருந்தால் அந்த பாக சொத்தினை பொறுத்து நான் கிரையம் பெற்ற ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல, வேறு பாக சொத்து எதுவும் நான் சேர்த்து வாங்கவில்லை. தாவா சொத்து காலி மனையாக உள்ளது என்றாலும் அதில் பிரதிவாதிகள் குப்பை கொட்டுவார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து வழியாக ஆடு மாடுகள் செல்கிறது என்றால் இல்லை, வேறு வழியாக தான் செல்லும்.

14) எனக்கு பாத்தியப்பட்ட பொதுவில் பிரிப்படாத சொத்தை பொறுத்து ஆடு மாடு மற்றும் வேறு நபர்கள் உள்ளே நுழையாதவாறு முள்வேலி அமைத்துள்ளேனா என்றால் அமைத்துள்ளேன். தாவா சொத்தில் முள்வேலி அமைத்துள்ளேனா என்பதை பொறுத்து நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை பெற்றால் உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரிதான், முள்வேலி இல்லை கருவேல மரங்கள் , வாதமடக்கி, வேப்பமரம் ஆகிய மரங்கள் வைத்து உயிர்வேலி தான் உள்ளது. மேற்படி மரங்கள் எத்தனை ஆண்டுகளாக உள்ள மரங்கள் என்றால் 8 அல்லது 9 வருடங்கள் இருக்கும். பட்டா ஆவணங்களை தவிர தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்பதை காட்ட வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் வரி ரசீதுகள் உள்ளது செட்டில்மெண்ட் ஆவணம், அடங்கல் மற்றும் வரைபடம் உள்ளது. பொதுவில் பிரிபடாத தாவா சொத்தை வாய்மொழி பாகபிரிவினை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் கிரையம் பெறும்போது பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்த காரணத்தினால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், தொந்தரவு மற்றும் தகராறு செய்த

காரணத்தினால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வருவாய் துறை, நீதிதுறை மற்றும் நிலஅளவைதுறை ஆகியவற்றை பற்றி விபரம் தெரியும் என்றால் சரிதான், சுமாராக தான் தெரியும்.

15) நான் தாவா சொத்தை கிரையம் பெறும் போது பிரதிவாதிகள் சொத்தையும் சேர்த்து கிரையம் பெற்றதாக தான் பிரதிவாதிகள் கட்சி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா புலஎண்ணின் மொத்த விஸ்தீரணமான 34-1/2 செண்டில் நாச்சாரம்மாளுக்கு உரிய பாகசொத்துக்களையும் சேர்த்து இந்த பிரதிவாதிகளுடைய 8-1/2 செண்ட் இடத்தையும் சேர்த்து நான் கிரையம் பெற்றுள்ள காரணத்தினால் எனது கிரைய பத்திரத்தில் உள்ள கூடுதலான 8-1/2 செண்ட் சொத்தானது செல்லத்தக்கதல்ல என்று இந்த பிரதிவாதி கட்சி செய்வதாலும், உரிமைமூலம் மறுக்கப்படுவதாலும் நான் விளம்புகை பரிகாரம் கோராமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கானது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல, கூடுதலாக நான் எந்த சொத்தையும் கிரையம் பெறவில்லை. தாவா சொத்தை கிரையம் பெறும் போது தாவா புல எண்ணில் கூட்டுப்பட்டாதாரர்களான பிரதிவாதிகளிடம் வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டதா என்ற விபரத்தை கேட்டுத்தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், வாய்மொழி பாகபிரிவினை ஏற்பட்டதாக சொன்னார்கள்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 25.10.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.